# இலங்கைத் தமிழர் பிரச்சினையும் கருணாநிதியும் - ஒரு வரலாற்றுப் பார்வை

[1] பேராசிரியர் க.அருந்தவராஜா [2] மங்களரூபி சிவகுமார்
[1] இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[2] விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[1] arunn.msu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் நிகழ்ந்து வருகின்ற தமிழர்களுடன் தொடர்புபட்ட இனப்பிரச்சினையென்பது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னதாகவே ஆங்கிலேயர்களினால் திட்டமிடப்பட்டு அத்திவாமிடப்பட்ட ஒரு பாரிய பிரச்சினயாக இருந்து வருகின்றது. இறுதிப்போர் முடிந்த பின்பும் உரிமைக்கான போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து வருகின்றது. இது ஆங்கிலேயர்களது ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலணித்துவ நாடுகள் பலவற்றில் அவர்கள் கையாண்ட பிரத்தாளும் தந்திரத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகின்றது. நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராக உக்கிரமடைந்த இலங்கையின் இனப்பிரச்சினையின் தாக்கமானது அயல் நாடான இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் செல்வாக்கினைச் செலுத்த ஆரம்பித்தமையின் பின்னணியில் இந்தியாவும் இலங்கையின் இனப்பிரச்சினையில் தனது தேச நலன் கருதி மூக்கினை நுழைக்க ஆரம்பித்தது. அவ்வகையில் தமிழகத்தின் முன்னாள் முதல்வர்களான எம்.ஜி.இராமச்சந்திரன், கருணாநிதி, ஜெயலலிதா போன்றவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்ட தமிழக முதல்வர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் கருணாநிதியினைத் தவிர மற்றைய இருவரும் தி.மு.க கட்சியினைச் சாராதவர்கள். அவ்வகையில் கருணாநிதி தமிழகத்தின் முதல்வராக இருந்த ஐந்து தடவைகளில் 4 தடவைகள் இலங்கையின் இனப்பிரச்சினையானது வேகம் பெற்றிருந்தது. இதன் பொருட்டு ஒரு தடவை ஆட்சியினையும் பறிகொடுத்தவர். இலங்கைத் தமிழருக்காகப் பல்வேறு போராட்டங்களிலும் வயது முதிர்ந்த நிலையிலும் ஈடுபட்டவர். முடிந்த உதவிகள் பலவற்றினை இலங்கையிலும் தமிழகத்திலும் வாழ்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்குச் செய்தவர். இனப்பிரச்சினை தீர்விற்கான நடவடிக்கைகளில் இறங்கியவர். இருப்பினும் இலங்கையில் போர் உச்சக்கட்டத்தினை அடைந்திருந்த நேரத்தில் போரினைத் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற விமர்சனத்திற்கும் உள்ளானவர். வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விமர்சன ஆய்வாக அமையப்பட்ட மேற்குறித்த ஆய்விற்குத் தேவையான தரவுகள் நேர்காணல்கள், அவதானிப்புக்கள், கலந்துரையாடல்கள், சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையம் என்பவற்றிலிருந்து முதற்தர மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. கருணாநிதி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் இதய சுத்தியுடன் அவரால் முன்னெடுக்கப்பட்டனவா என்பது ஆய்வின் பிரதான பிரச்சினைகளிலொன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வின் ஊடாகப் பல்வேறு நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. குறிப்பாக இலங்கையின் இனப்பிரச்சினையில் கருணாநிதி தலையிட்டமைக்கான பின்னணி, மேற்கொண்ட சாதக, பாதக நடவடிக்கைகள், பிற தமிழக முதல்வர்களுடன் ஒப்பிடுகின்றபோது மேற்குறித்த விடயமாக இவரது தனித்தன்மை போன்ற நோக்கங்கள் பார்க்கப்படுகின்றன. எது எவ்வாறாயினும் ஈழ அனுதாபிகள் என்பது ஒருபுறமிருக்க அதற்கும் அப்பால் அவர் ஒரு அரசியல்வாதியாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினை பொறுத்து அவரது நவடிக்கைகள் அமைந்திருந்தன என்பதனையும் மறுக்க முடியாது.

**பிரதான சொற்பதங்கள்** : ஈழத்து அகதிகள், மத்திய அரசு, தமிழக மக்கள், ஈழத்துப் போராட்டக் குழுக்கள், கருணாநிதி

## ஆய்வின் அறிமுகம்

இலங்கையின் இனப்பிரச்சினையுடன் தொடர்புகொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இதற்கு இந்தியா அதன் அயல்நாடு என்பதனை விடவும் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற இனப்பிரச்சினையினது ஆழமும் அதனது வேரும் அதற்கு நன்கு தெரியும் என்பதே உண்மை. இந்திய மத்திய அரசானது நீண்டகாலமாக இவ்விடயமாகத் தனது பிராந்திய நலன் கருதி நடவடிக்கைகளை

எடுத்து வந்திருந்தாலும்கூட இலங்கைத் தமிழ் மக்களுடன் தொப்புள் கொடி உறவினைக் கொண்ட தமிழக மக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அனுதாபம் கொண்டவர்களாகவே எப்போதும் இருந்து வந்துள்ளனர். இலங்கையில் 1980களின் தொடக்கத்திலிருந்து இனப்பிரச்சினை வேகம் பெற்ற பின்னணியில் அகதிகளாகத் தமிழகம் நோக்கி இலங்கைத் தமிழர் சிலர் புலம்பெயர ஆரம்பித்ததுடன் நேரடியாகவே இலங்கையின் அரசியலில் இந்தியா தலையிட ஆரம்பித்தது. அவ்வகையில் தமிழகத்தினது முதல்வர்களிலொருவரான கருணாநிதியும் தனது பதவிக்காலங்கள் ஒவ்வொன்றிலும் இலங்கையின் இனப்பிரச்சினையில் தனது செல்வாக்கினைச் செலுத்தியவர். அவர் தமிழகத்தின் முதலமைச்சராக வருவதற்கு முன்னதாகவே இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை கொண்டிருந்தவரென்பதனை அவர் அக்காலப்பகுதிகளில் மேற்கொண்ட சில போராட்ட நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் இறுதி யுத்தம் இலங்கையில் நிகழ்ந்த காலப்பகுதியில் அவர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளினால் அரசியல்வாதி ஒருவர் என்ற அடிப்படையில் அவர் பல்வேறு விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகியமையும் மறுப்பதற்கில்லை.

**கருணாநிதியும் திராவிட அரசியலும்**

திராவிட அரசியலின் முற்றுப்புள்ளி போன்று தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மரணம் அமைந்துவிட்டதாக அரசியல் விமர்சகர்களினால் விமர்சனம் செய்யப்படுமளவிற்குத் தற்போதைய தமிழகத்தின் சூழல் அமைந்துவிட்டது. கருணாநிதி தேசிய மட்டத்தில் செல்வாக்கினைப் பெற்ற அரசியல்வாதி. கலைத்துறையில் 70 வருடங்களும் 60 வருடங்கள் சட்டசபையிலும் பணியாற்றி பல தசாப்தங்கள் பொதுவாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். போட்டியிட்ட அனைத்துச் சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டிச் சாதனை படைத்தவர். முதலமைச்சராக, எதிர்கட்சித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக நீண்டகாலம் அரசியல் வாழ்வில் சேவையாற்றியவர். அரசியலில் அனுபவமும் சாணக்கியமும் ஆளுமையும் அவரிடம் இருந்தமையின் பின்னணியிலேதான் அண்ணாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கழகத்தினைத் தொடர்ந்து இத்தனை வருங்கள் அவரால் பாதுகாக்க முடிந்தது. தமிழ் இலக்கியப் படைப்பாளியாக, வசன கர்த்தாவாக, விமர்சகராக, ஆற்றல்மிக்க பேச்சாளராக, பாலாசிரியராக, தமிழ் மொழிக் காப்பாளராக, அரசியல்வாதியாக இவரைப் பன்முகத்தன்மை கொண்ட அறிஞராக அடையாளங் காண முடியும்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் (1891) திராவிட இயக்கத்தினைத் தோற்றவித்தவராகக் கருதப்படுகின்ற அயோத்தி தாசர் என்பவரினால் திராவிட மகாஜன சபை என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாகப் பல முற்போக்கான நடவடிக்கைகள் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்தன. (Diehl,Anita.1977) தொடர்ந்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1916) தியாகராஜ செட்டியார் மற்றும் டி.எம்.நாயர் என்பவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கட்சியானது திராவிட அரசியலின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நீதிக்கட்சியில் பெரியாரென அழைக்கப்பட்ட ஈ.வெ.இராமசாமி காலப்போக்கில் இணைந்து கொண்டதன் காரணமாக தமிழக மக்களது வாழ்வியலில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. சமூக சீர்திருத்தவாதியாகக் காணப்பட்ட பெரியார் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் சாதிப்பாகுபாடற்ற சமுதாயத்தினை உருவாக்கவும், இறை மறுப்பாளர்களையும், பெண் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டார். சில காலத்தின் பின்னதாக அவரது முயற்சியினால் நீதிக்கட்சியானது திராவிடர் கழகம் எனப்பெயர் மாற்றம் கண்டது. இதுவே தமிழகத்தின் முதலாவது திராவிடக் கட்சியாகக் கருதப்படுகின்றது. அக்காலப்பகுதியில் இக்கட்சியானது திராவிடக் கொள்கைகளைப் பரப்புவதிலும் ஹிந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் தீவிரமாக இறங்கியது.

பெரியாரினைப் பொறுத்தவரை அவர் நாயக்கர் எனப்பட்ட உயர்சாதிப் பிரிவில் பிறந்தபோதும் தாழ்த்தப்பட்ட மக்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர். தீண்டாமை, மூடநம்பிக்கையினை அகற்றுதல், பார்பனியம், பெண்விடுதலை, பெண்கல்வி என்பனவற்றுக்காகப் பாடுபட்டவர். எல்லாவற்றுக் கும் காரணம் மூடநம்பிக்கையும் அதற்குக் காரணமாக உள்ள கடவுள் நம்பிக்கையும், கடவுளின் பெயரினால் உருவான சமயங்களுமே எனக் கருதிய பெரியார் பூரணமான இறைமறுப் பாளராகத்

திகழ்ந்தார். (வீரமணி,கே.1992) பின்னாளில் பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் திராவிடர் கழகத்திலிருந்து விலகிய கா.ந.அண்ணாத்துரையினால் ஆரம்பிக்கப்பட்டதே திராவிட முன்னேற்ற கழகமாகும். (தி.மு.க) இக்கட்சியானது 1967இல் தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் பெரு வெற்றியினைப் பெற்று ஆட்சியினை அமைத்துக்கொண்டது.

பெரியாரினால் விரிவுபடுத்தப்பட்ட திராவிட அரசியலானது 1960களிலிருந்து தமிழகத்தில் செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. ஆரம்பத்தில் திராவிடக் கட்சிகளது அரசியல் வளர்ச்சியானது படிப்படியாக முன்னேறி அது 1967இல் தி.மு.க ஆட்சி அமைப்பதில் முடிவிற்கு வந்தது. 1970களில் திராவிட இயக்கத்தில் உடைவு ஏற்பட்டாலும்கூட தமிழகத்தினது நிர்வாகமானது எதோ ஒரு திராவிடக் கட்சியினது வசமே தற்போதுவரை இருந்துவந்துள்ளது. அண்ணாத்துரையினது காலத்தில் இத்தகைய திராவிட அரசியலென்பது வளர்ச்சியின் உச்சத்தினைத் தொட்டது. தாலி, சாதி, புரோகிதர் இல்லாமல் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்களுக்கு அங்கீகாரத்தினை வழங்குவதற்கான சட்டமானது அண்ணாத்துரை முதல்வராக இருந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பகுத்தறிவு, சமத்துவம் என்பவை திராவிடக் கொள்கைகளில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன. (முழவாயனெயசயஅயடி ீழரௌயஅல.1995)

கருணாநிதி பாடசாலைக் காலங்களிலேயே திராவிட, சுயமரியாதை இயக்கங்களினால் கவரப்பட்டது மட்டுமன்றி பெரியார், அண்ணாத்துரையின் கொள்கைகளினாலும் ஈர்க்கப்பட்ட ஒருவராகவே திகழ்ந்தவர். அண்ணா இறக்கும்வரை அவருக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தவர். பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டு சிறை சென்றவர். அண்ணாவின் மறைவின் பின்னராக தி.மு.கவின் தலைமைப்பொறுப்பினை ஏற்றது மட்டுமன்றி முதல்வராகவும் 5 தடவைகள் தமிழகத்தினை நிர்வாகம் செய்தவர் கருணாநிதி. 1957இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதனைத் தொடர்ந்து 2016இல் திருவாரூர் தொகுதிவரை 13 தடவைகள் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு அனைத்துத் தேர்தலிலும் வெற்றியினைப் பெற்றிருந்தார். மரணிக்கும்வரை தி.மு.கவினை வலுவான கட்சியாக வைத்திருந்த பெருமைக்க உரியவர். முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் தமிழக மக்களின் நலனின் பொருட்டுச் சீர்திருத்தங்கள், நலத்திட்டங்கள் பலவற்றினை அறிமுகப்படுத்தியிருந்தார்.

**இலங்கைத்தமிழர் பிரச்சினை**

இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்ட நாடுகளில் இதன் அயல் நாடுகளிலொன்றான இந்தியாவிற்கும் பங்கு உண்டென்பதில் மாற்றுக் கருத்துக்களில்லை. அதற்கு அயல்நாடென்ற அனுதாபம் ஒரு புறமிருக்க தன்னைவிட பிறிதொரு அந்நிய சக்தி இலங்கையில் செல்வாக்குச் செலுத்துவதனை அது தனது பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி கருதி ஏற்றுக்கொள்ளாமை மற்றொரு காரணமாகவும் கருதப்படுகின்றது. ஆனால் இந்தியாவின் பிரதான மாநிலங்களிலொன்றான தமிழகத்தினைப் பொறுத்தவரை அதன் மக்களும், அங்கிருந்த பெருமளவிலான அரசியல் சார்ந்த தலைவர்களும் தமிழ் மக்கள் என்ற சகோதர உணர்வுடன் உண்மையான அனுதாபிகளாகவே இலங்கையினது இனப்பிரச்சினையினையும் இலங்கைத்தமிழர் மீதான அடக்குமுறைகளையும் நோக்கினர். அவ்வகையில் மத்திய அரசினது நிலைப்பாட்டிலிருந்து தமிழ்நாட்டினது நிலைப்பாடானது எப்போதும் இலங்கைத்தமிழர் விவகாரம் பொறுத்து வேறுபட்டதாகவே இருந்து வந்துள்ளது. தமிழக மக்கள் துணிந்து பல விடயங்களில் இலங்கைத் தமிழருக்காக குறிப்பாக இலங்கை அரசிற்கு எதிராகக் கண்டனங்களையும் போராட்டங்களையும் தங்களது தேசத்தினையும் தாண்டிச் செய்தனர். செய்தும் வருகின்றனர். இலங்கைத்தமிழர் பிரச்சினையினை ஐ.நா வரை கொண்டு செல்லக் காரணமாக இருந்தவர்கள். சிறை சென்றனர். இதன் பொருட்டு உயிரையும் இழந்தனர்.

இனப்பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பானது இவ்விடயமாக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றதென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. வரலாற்று ரீதியாகவே தமிழ் பேசும் மக்களை அதிகளவில் உள்வாங்கிக்கொண்ட இலங்கையின் வடபகுதிக்கும் தமிழகத்திற்கும் இடையிலே காணப்பட்ட நீண்டகால உறவு பற்றி

விளக்குவதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஆரம்பித்தாகக் கருதப்படுகின்ற இத்தகைய உறவானது அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாட்டினடிப்படையில் அமைந்திருந்தது. ஐரோப்பியரது ஆட்சியிலும்கூட இத்தகைய உறவானது கைவிடப்படவில்லை. நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராகவும் அமைதியான நிலையிலேயே இத்தகைய இரு பகுதிகளுக்குமிடையிலான உறவுநிலை காணப்பட்டு வந்தது. அதேநேரத்தில் சிங்கள இனத்தினது தொன்மையினைக் காட்ட முற்பட்ட சிங்கள வரலாற்றாசிரியர்கள் பலரும் தமிழகத்திற்கும் இலங்கையின் வடபகுதிக்கும் இடையிலே இருந்துவந்த இத்தகைய நீண்டகால உறவின் தன்மையினை எடுத்துக்காட்டத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (முகம்மது சமீம்,அ.1998)

இலங்கைத் தமிழரது பிரச்சினையில் ஆரம்பகாலங்களில் இந்திய மத்திய அரசானது அதிகளவில் கரிசனை எடுக்கவில்லை. 1956இல் தனிச்சிங்களச் சட்டத்தினது அறிமுகமும் அதன் பின்னரான இலங்கைத்தமிழரது போராட்டங்களும் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயங்களில் இந்திய மத்திய அரசானது பண்டாரநாயக்காவுடன் நல்லுறவினை வளர்த்துக்கொண்டிருந்தது. இதனால் இலங்கைத் தமிழர்களின் சமகாலத் தலைவர்களான எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சி.சுந்தரலிங்கம் போன்றவர்களின் எதிர்ப்பினையும் மத்திய அரசானது சம்பாதித்திருந்தது. இதற்கிடையில் 1971இல் பங்களாதேஷின்மீதான இந்தியாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தானுடைய கப்பல், விமானப் போக்குவரத்திற்கு இலங்கை அரசு உதவி செய்திருந்தது. இருப்பினும் இவ்விடயமாக அந்நேரத்தில் இந்தியா வெளிப்படையாகத் தன்னுடைய அதிருப்தியை இலங்கைமீது வெளிக்காட்டவில்லை. 1980இல் இந்தியப் பிரதமராகத் தெரிவான இந்திராகாந்தி அமெரிக்க விரோதப் போக்கினைக் கைக்கொண்டதனால் அமெரிக்காவின் கவனம் இந்தியாவிற்கு அயல்நாடுகளான இலங்கை மற்றும் பாகிஸ்தான்மீது சென்றது. இந்நிலையில் தனது அயல்நாடுகளில் அமெரிக்காவின் செல்வாக்கு இருப்பதனை இந்தியா விரும்பவில்லை. இக்காலமளவில் இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைய ஆரம்பித்தமையின் பின்னணியில் தன்னுடைய பிராந்திய நலனைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் இந்தியா தலையிடத் தொடங்கியது. எனவே அமெரிக்காவிற்கு எதிராக அமெரிக்காவினை நம்பியுள்ள இலங்கைக்குச் சவால் விடுகின்ற வகையில் இலங்கைத் தமிழரது போராட்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உதவ முன்வந்ததென்பதே உண்மை. இது இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கும் பிரச்சினையினைக் கொடுத்தது. தொடர்ந்து இந்திய அரசானது தமிழ் போராளிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கு தமிழக, இலங்கை அரசியல்வாதிகளை பயன்படுத்த முற்பட்டது.

இலங்கையினது சுதந்திரத்தின் பின்னராகத் தமிழகத்திற்கும் இலங்கைத்தமிழ் மக்களுக்கும் இடையிலே இருந்துவந்த நெருக்கமான உறவினைத் தென்னிலங்கை எப்போதும் சந்தேகக் கண்ணுடனேயே நோக்கி வந்தது. இந்நிலையில் நாட்டில் 1980களின் தொடக்கத்திலிருந்து உள்நாட்டுப்போர் சூடுபிடிக்க ஆரம்பித்தமையின் காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களில் சிலர் அகதிகளாகத் தமிழகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இக்காலகட்டத்திலேதான் விடுதலைப்புலிகள் உள்ளிட்ட பல்வேறு போராட்டக் குழுக்கள் தமிழகத்தினைத் தளமாகக்கொண்டு பரவலாக இயங்க ஆரம்பித்தன. (அன்ரன் பாலசிங்கம்.2003) மேலும் இப்போராட்டக் குழுக்களினது ஒற்றுமையினைத் தமிழகத்திலிருந்த பல ஈழப்பற்றாளர்களும்கூட அக்காலப்பகுதியில் உணர்ந்திருந்தனர். தொடர்ந்து 1983இல் இலங்கையில் நடைபெற்ற யூலைக் கலவரத்தின் பின்னராகத் இலங்கைத் தமிழருக்கும் அவர்களது போராட்ட நடவடிக்கைகளுக்கும் தமிழகத்தில் ஆதரவு பெருகியது. இப்பின்னணியிலேதான் தமிழகத்தினைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பலரும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவினை வழங்குவதன் ஊடாகத் தேர்தல் காலங்களில் தமிழக மக்களிடமிருந்து வாக்கினைப் பெற ஆரம்பித்தனர். தொடர்ந்து இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாக இந்திய அரசும், தமிழக அரசும் தலையிடவேண்டிய நிலைமை உண்டானது. இவ்விடயமாக இலங்கை - இந்திய அரசுகளும் மாறி மாறி ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தின. குறிப்பாக. ஆயுதக்குழுக்களை இந்தியா பயிற்றுவிப்பதாக இலங்கை அரசு குற்றஞ் சாட்டியது.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி**

இலங்கைத் தமிழர் பிரச்சினையானது சூடுபிடிக்கத் தொடங்கிய காலங்களில் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்தவர்களில் பிரதான இடத்தில் வைத்துப் பேசப்படுபவர் கலைஞர் மு.கருணாநிதி. அவ்வகையில் போராளிக்குழுக்களின் எழுச்சிக் காலகட்டத்திற்குரியவராகவும் அவர்களது வீழ்ச்சிக்கான காலப்பகுதிக்குரியவராகவும் நோக்கப்படுகின்றார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் துணிந்து தன்னைத் தொடர்புபடுத்தியவராகவும் அதன் பொருட்டுத் தனது ஆட்சியினைப் பறிகொடுத்த ஒருவராகவும் காணப்படுகின்றார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எம்.ஜி.ஆருக்கு அடுத்த நிலையில் வைத்து நோக்கப்படுகின்ற கருணாநிதி இலங்கைத் தமிழ் மக்கள் பலரிடமும் மேற்குறித்த விடயமாகப் பெருமளவிலான செல்வாக்கினைப் பெற்றிருந்தார்.

கருணாநிதியினது மரணத்தினைத் தொடர்ந்து பல்வேறு விடயங்கள் அவர் தொடர்பாக கசிந்தன. அவற்றிலொன்று இலங்கைத் தமிழரது பிரச்சினையில் அவர் எடுத்த நிலைப்பாடு பற்றியதாக உள்ளது. அதாவது இறுதிப்போரின் போது அவர் எடுத்த நிலைப்பாடு பற்றியதாக அது உள்ளது. கருணாநிதிக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் ஊடகங்களில் பதிவு செய்யப்பட்டன. இருப்பினும் பொதுவானதொரு நிலையிலிருந்து நாம் மேற்குறித்த விடயத்தினை நோக்குதல் வேண்டும். கருணாநிதி முதலமைச்சராக வருவதற்கு முன்னதாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாட்டங்கொண்டு அவர்களின் நலனின் பொருட்டுப் பல்வேறு நடவடிக்கைகளினை முன்னெடுத்தவர். 2009இல் நடைபெற்ற குறிக்கப்பட்ட நிகழ்வினை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு அவரை விமர்சிப்பது எந்தளவிற்குப் பொருத்தமானதென்பதனை ஆராய வேண்டும். தமிழர்கள் இலங்கையில் கொல்லப்படும்போது அவர் மத்திய அரசுடன் இணைந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். மத்திய அரசிற்கு அழுத்தத்தினை வழங்கவில்லை. கூட்டிலிருந்து விலகியிருக்கலாம், பதவியாசை கொண்டவர் போன்ற விமர்சனங்கள் இன்றுவரை அவருக்கு எதிராக இலங்கைத் தமிழர் பிரச்சினை விடயமாக ஒரு சிலரினால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஒன்றினை உணரவேண்டும். இலங்கைத் தமிழர் விவகாரத்தில் எனது முடிவு மத்திய அரசின் முடிவே என்ற கூறிய கருணாநிதியினைப் பற்றிக் கதைப்பதனைத் தவிரத்து இவ்விடத்தில் போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்களென்று தெரிவித்த ஜெயலலிதா அவரிடத்திலிருந்தாலும் இதனையே செய்திருப்பாரென்பதே அது.

இந்தியா என்பது தமிழ்நாடு அல்ல. அது மத்திய அரசு. 1983இன் பின்னராக இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சிகள் உள்ளிட்ட வசதிகள் தமிழகத்தில் செய்துகொடுக்கப்பட்டதென்றால் அதனை மத்திய அரசினது உதவியின்றி செய்திருக்க முடியாது. முதலில் தமது நாட்டு மக்கள், தமது ஆட்சி என்பனவே ஆட்சியாளருக்குத் தெரியும். அவர்களது நலன்களே பிரதானம். அதற்கு அடுத்த நிலையில்தான் பிறவற்றினை யோசிக்க முடியும். அது இயல்பானதே. மியன்மாரிலிருந்து ரொஹிங்யர்கள் அகதிகளாக அலைக்கழிந்தபோது எத்தனையோ ரொஹிங்ய இஸ்லாமிய மக்கள் வாழுகின்ற நாடுகள் இருந்தபோதும் அவர்களை அவை ஏற்கவில்லை. (அருந்தவராஜா,க.2018) ஆனால் தமிழகமோ அகதிகள் பலருக்குப் புகழிடம் வழங்கியதனை மறுக்க முடியாது. இன்றுவரை அது ஆதரவுக் கரம் நீட்டிக்கொண்டே வருகின்றது. கருணாநிதியினைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகச் செயற்பட்டும் பேசியும் வந்தமையினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர். ரஜீவ்காந்தியின் படுகொலை, தமிழ் போராளிக்குழுக்களிடையிலான மோதல்கள், அவர்களால் தமிழக மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் என்பனவற்றிற்காக விமர்சிக்கப்பட்டவர். இவர் காலத்தில் தமிழகத்தில் போராளிக்குழுக்கள் பகிரங்கமாகவே ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்தனர். அவர்களுக்கு இலங்கை அகதிகளுக்குப் போலவே இலவச போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. இறுதியில் இவற்றினைக் காரணமாகக்கொண்டு மத்திய அரசினால் 1991இல் ஆட்சிக்கவிழ்ப்புச் செய்யப்பட்டவர். இத்தகைய ஆட்சிக் கவிழ்ப்பானது மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் அதற்கு மத்திய அரசினால் சொல்லப்பட்ட பிரதான காரணம் கருணாநிதியினது நிர்வாகத்தில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதென்பதே.

ஜெயலலிதா ஆட்சியினைக் கைப்பற்றும் நோக்குடன் தி.மு.கவிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலே நெருக்கமான உறவு இருப்பதாகப் பிரச்சாரம் செய்துவந்தார். அவர் சுப்பிரமணியம்சுவாமி, சோ, இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ராம் போன்றவர்களுடன் இணைந்து கருணாநிதிக்கு எதிரான எதிரப்பலையொன்றினைத் தமிழகத்தில் உருவாக்கினார். அதில் வெற்றியும் பெற்றார். கருணாநிதியினாலும் புலிகளினாலும் தனது உயிருக்கு ஆபத்து எனப் பகிரங்கமாகவே கூறிவந்தார். சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்திற்குத் தமிழகம் வந்திருந்த ரஜீவ்காந்தியினது கொலையும் இடம்பெற்றது. இச்சம்பவத்துடனும் கருணாநிதி இணைத்துப் பேசப்பட்டார். கருணாநிதியின்மீது பழி விழும் என்ற தெரிந்தும் இச்சம்பவம் நடைபெற்றால் தேர்தலில் கருணாநிதி தோற்கடிக்கப்படுவார் என்று புரிந்தும் தமிழகத்தில் ரஜீகாந்தியின் படுகொலைச் சம்பவம் நடைபெற்றது. இதனால் இறுதிப்போரில் அவர் தன்னையும் அரசினையும் காப்பற்றும் வகையில் அவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன. (அருந்தவராஜா,க.2017) இதனால் மறுபடியும் தேவையற்ற அசௌகரியங்களில் அவர் மாட்டிக்கொள்ள விரும்பியிருக்கமாட்டாரென்பதே உண்மை. ஆட்சிக்கவிழ்ப்பிற்குப் பின்னதாக தி.மு.கவிற்கும் காங்கிரசிற்கும் இடையிலே இருந்துவந்த உறவும்கூட நெருக்கமானதே. அத்தகைய உறவிலும் விரிசல் ஏற்பட அவர் விரும்பவில்லை. 1976இல் இந்திராகாந்தியினால் பல்வேறு காரணங்கள் தி.மு.கவினது அரசிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுக் கருணாநிதியினது அரசு கவிழ்க்கப்பட்டமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இத்தகையதொரு பின்னணியிலேதான் தனது பதவிக் காலத்தில் கருணாநிதி ஈழ ஆதரவுப் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதியினை வழங்கவில்லை என்ற கருத்துக்களும் உள்ளன.

இறுதிப்போர் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழகத்தில் 2011இல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்து அப்போதைய தமிழக மக்களது நாடித்துடிப்பினை அறிந்து ஏற்கனவே பின்பற்றிவந்த தனது ஈழஎதிர்ப்பு, புலி எதிர்ப்புக்கொள்கையினை அப்படியே ஜெயலலிதா இம்முறை ஈழஆதரவுக் கொள்கையாக மாற்றிக் கருணாநிதிக்கு எதிரான பிரச்சாரத்தினைத் தீவிரமாக்கியிருந்தார். இறுதிப்போரில் கருணாநிதி தவறு செய்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார். எனவே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதா 2009இற்கு முன்னதாக ஒரு கொள்கையும் பின்னராக மற்றொரு கொள்கையினையும் பின்பற்றினார். ஆனால் கருணாநிதியோ எந்த ஒரு கட்டத்திலும் தன்னை ஈழஎதிர்ப்பாளராகவோ அல்லது போராளிக்குழுக்களுக்கு எதிராகவோ கருத்துக்களைத் தெரிவிக்க வில்லை. ஒரே கொள்கையுடனேயே இருந்தார். இருப்பினும் ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று 1989-1991 காலப்பகுதிகளுக்கிடையிலே நடைபெற்ற சில சம்பவங்களின் விளைவாக ஒரு தளம்பலான தன்மையும் நழுவலான தன்மையும் இருந்ததென்பதனையும் மறுக்க முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு வித்திட்ட காரணங்களிலொன்றான தனிச்சிங்களச்சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் அதற்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை இலங்கைத் தமிழ் மக்கள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதனைக் கண்டித்து கருணாநிதி தனது 34ஆவது வயதிலேயே சிதம்பரத்தில் நடைபெற்ற மாநாட்டில் கண்டனத் தீர்மானமொன்றினை இயற்றியிருந்தார். 1961இல் இலங்கைத் தமிழர்களது உரிமையின் பொருட்டு கருணாநிதி உள்ளிட்ட தி.மு.கவினர் பெரும் பேரணியொன்றினைத் தமிழகத்தில் நடாத்தியிருந்தனர். 1983இல் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனக்கலவரத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருணாநிதியும் அன்பழகனும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (கருணாகரன்,2018ஆகஸ்ட்12) அதன் பின்னராக அவர் தம்மை ஈழ ஆதரவாளராக மாற்றிக்கொண்டார். இலங்கையிலிருந்து காலத்திற்குக் காலம் தமிழகம் சென்றுவந்த செல்வநாயகம், அமிர்தலிங்கம் உள்ளிட்ட அக்காலத் தமிழ்தலைவர்களைச் சந்தித்து தமது ஆதரிவனைத் தெரிவித்தார். அகதிகளாகச் சென்றவர்களை ஆதரித்தார். இலங்கைத் தமிழர்களுக்காகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டார். போராளிக்குழுக்களை இணைப்பதற்கான நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தார். அவர்களுக்குப் பல்வேறு உதவிகளையும் வழங்கியிருந்தார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்குச் சென்ற இலங்கைத் தமிழ் அறிஞர்களைப் பாதுகாப்புக் காரணங்கள் கூறி திருப்பி அனுப்பியவர் ஜெயலலிதா. அதேநேரத்தில் செம்மொழி மாநாட்டினை நடாத்தி இலங்கைத் தமிழ் அறிஞர்களை அருகிலேயே அமர்த்தியவர் கருணாநிதி.

எம்.ஜி.ஆருடன் தொடர்புகளை அதிகம் வைத்திருந்த புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கருணாநிதியிடமிருந்து விலகியிருந்தார். அதேநேரத்தில் ரெலோ இயக்கத்தின ̇தலைவர் சிறி சபாரத்தினம் கருணாநிதியுடன் இணைந்துகொண்டிருந்தார். 1985இல் சென்னையில் ரெலோவிற்கு ஆதரவாகவும் ஈழத்தமிழர் சார்பாகவும் மதுரையில் கருணாநிதி ரெஸோ (வுநுளுழு – வுயஅடை நுடயஅ ளுரிழசவநசள முசபயனெைையவழைெ) மாநாட்டினை நடாத்தினார். ஈழ ஆதரவு மாநாடாகக் காணப்பட்ட இம்மாநாட்டில் வாஜ்பேய், தேவகௌடா, என்.டி.ராமராவ் போன்ற முக்கியத்துவம் பெற்ற இந்தியத்தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். (அருந்தவராஜா,க.2017) கி.வீரமணி, பழ.நெடுமாறன் போன்றவர்கள் இம்மாநாட்டிற்கு கருணாநிதிக்குப் பக்கபலமாக இருந்த தமிழகத் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையில் இவை எல்லாம் எம்.ஜி.ஆருடனான போட்டி அரசியலினால் ஏற்பட்டதென்றாலும் அதில் ஓரளவு பொறுப்பான தன்மையும் கூடவே இருந்தது. சிறி சபாராத்தினத்தின் மறைவும் எம்.ஜி.ஆரின் இறப்பும் சிலகால இடைவெளியில் நடைபெற்றதனால் கருணாநிதியுடன் புலிகள் விரும்பியோ விரும்பாமலோ தொடர்புகளை வைத்திருக்க வேண்டிய தேவை இருந்தது. 1987இன் பின்னராக இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையில் மோசமான வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில் அதற்கு எதிராகக் கண்டனங்கள் பலவற்றினைத் தெரிவித்திருந்தார் கருணாநிதி. இந்தியப்படை வெளியெற்றப்பட வேண்டுமெனக் கருத்துக்களை கூறியவர் கருணாநிதி.

இந்திய இராணுவம் மீளவும் வி.பி.சிங் காலத்தில் இந்தியா திரும்பியபோது அவர்களை வரவேற்பதற்கு அச்சமயத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கருணாநிதி செல்லவில்லை. ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த இராணுவத்தினை வரவேற்க நான் செல்லமாட்டேனென்று துணிந்து கூறியவர். திருகோணமலையிலிருந்து திரும்பிய தம்மை வரவேற்க தெரு நாய்கள்கூட வரவில்லையென இந்திய இராணுவ அதிகாரி கேர்ணல் அஜித் பிந்தர் பின்னாளில் தெரிவித்த கருத்திலிருந்து இதனை ஊகிக்க முடியும். இது அச்சமயத்தில் இந்திய இறையாண்மையினை அவமதித்த செயலாகப் பலராலும் விமர்சிக்கப்பட்டது. மேலும் இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த சமயத்தில் தி.மு.கவில் உறுப்பினராக இருந்த வை.கோபால்சாமி இரகசியமான முறையில் கடல் மார்க்கமாக தமிழர் பகுதிகளுக்கு வந்து இங்குள்ள நிலமையினை இரகசியமான முறையில் அறிந்து சென்றதுடன் புலிகளின் இயக்கத்தலைவர் பிரபாகரனையும் சந்தித்ததாகச் செய்திகள் வெளிவந்தன. இதுவும் கருணாநிதியுடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டது. 1995இல் இவரால் மேற்கொள்ளப்பட்ட ஈழஆதரவுப் பேரணி, 2009இல் கருணாநிதி மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் என்பன அரசியல் உள்நோக்கம் கொண்டவை, அவை கேலிக்கூத்தானவை என்றும் விமர்சிக்கப்பட்டாலும்கூட அவையெல்லாம் ஈழத்தமிழருக்காகக் கருணாநிதியினால் செய்யப்பட்ட போராட்டங்களே.

இந்திய-தமிழக அரசியலில் மூத்த பல்துறை சார்ந்த பழுத்த அரசியல்வாதி இவரைப்போல் எவருமில்லை. ரஜீவ்காந்தியின் மரணத்திற்கு முன்னதாகவும் பின்னதாகவும் மேற்குறிப்பிட்டபடி நடைபெற்ற சில அசம்பாவிதங்கள் அவரை நெருக்கடிக்கு உள்ளாகியது. இத்தகையதொரு பின்னணியிலேதான் அவரது ஈழப்போராட்ட ஆதரவென்பது தளம்பலான நிலையினை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. இதற்கு முக்கியமான காரணம் யாதெனில் இந்தியச் சூழலில் அவர் செய்யத் தொடங்கியிருந்த அரசியல் சமரசங்களும் பொருத்தமற்ற புதிய கூட்டுமாகும். இதனால் இத்தகைய சக்திகளை மீறி அவரால் தனித்துச் சுயமாக எத்தகைய முடிவுகளையும் எடுக்க முடியவில்லை. (கருணாகரன்,2018ஆகஸ்ட்12) மத்தியில் தான் வைத்திருந்த கூட்டணிக்கு ஏற்பவும் மாநிலத்தில் உள்ள நிலமைகளுக்கு ஏற்பவும் ஈழப்போராட்டத்தினைப் பயன்படுத்த ஆரம்பித்தார். வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் இவருக்கும் அவருக்குமிடையிலான உறவானது நட்பு சார்ந்த உறவாகக் காணப்பட்டது. அத்தருணத்தில் இலங்கைத் தமிழர்கள் சார்பாக இவர் மூலமாகச் சில நடவடிக்கைகளையும்கூட கருணாநிதி மேற்கொண்டிருந்தார். இறுதியாக கருணாநிதியினது ஆட்சியினைக் கலைக்க மறுத்தமையின் காரணமாகவே ஜெயலலிதா இவரைக் கைவிட வேண்டியதாயிற்று.

ஈழப்போராட்டமென்பது தமிழக அரசியல் கட்சிகளது தேர்தல் களத்தில் பிரதான பங்கெடுக்க ஆரம்பித்தது. தமிழகக் களநிலையினை அறிந்து அதற்கேற்ற வகையில் ஈழஆதரவு மற்றும் எதிர்ப்பு

ஆகிய கொள்கைகளைத் தமிழகத்தின் பிரதான கட்சிகள் பின்பற்ற ஆரம்பித்தன. குறிப்பாக ஜெயலலிதா கருணாநிதியினைத் தோற்கடிக்க இரண்டு தடவைகள் எடுத்த பிரதான ஆயுதம் ஈழப்போராட்டம். அதாவது 1991இல் நடைபெற்ற சட்டசபைக்ககான தேர்தல் பிரச்சாரத்தில் ஈழ எதிர்ப்பானது பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. 2011இல் நடைபெற்ற தேர்தலில் ஈழஆதரவென்பது தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பிரதான ஆயுதமாகப் பயன்பட்டது. தமிழக ஆட்சியாளர்களுக்கென்று ஒரு கட்சி உண்டு. அவர்கள் கட்சி அரசியலை நடாத்திச் செல்லுகின்றனர். இதனால் அவர்களில் சிலர் ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று தமது கட்சி நலன்களுக்காகவே ஈழப்போராட்டத்தினைப் பயன்படுத்தினர். அவர்களில் பலரும் முத்துக்குமார் போன்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தமது உயிரை ஒரு பொருட்டாக மதிக்கின்ற மனநிலையில் இருக்கமாட்டார்கள். இதனால் அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்களை அவர்களது பின்புலத்தில் வைத்தே புரிந்துகொள்ளுதல் அவசியம்.(நிஸாந்தன்,2018ஆகஸ்ட்12) கருணாநிதி ஒரு தனிமனிதரல்ல. அவர் கோடிக்கணக்கான மக்களது தலைவர். கருணாநிதி தமிழுக்காக உழைத்தர், தி.மு.கவிற்காக உழைத்தார். காங்கிரஸ் கட்சிக்காக உழைத்தாரென்பதே பொருத்தம். அவர் மட்டுமன்றி இதுவரை காலமும் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் பலரும் ஈழப்போராட்டத்தினை வைத்து அரசியல் செய்தனர் என்பதே உண்மை.

**முடிவுரை**

தமிழக மக்களிடையிலே இலங்கைத் தமிழர் தொடர்பாக அனுதாப அலை இருப்பதனை எவரும் மறுக்க முடியாது. அதேநேரத்தில் அது அவர்களது பிரதான கொள்கையாக இல்லை என்பதனையும் ஏற்றக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி எமது பிரச்சினையினை முன்வைத்து எந்த ஒரு கட்சியும் தமிழகத்தில் தேர்தலில் வெற்றி பெற்றது கிடையாது. ஈழத்தமிழர் பிரச்சினையினை முன்னிறுத்திய வை.கோபால்சாமி, சீமான் போன்றவர்களது கட்சி அரசியல் பிரகாசிக்க முடியாமல் போனது வரலாறாகவே உள்ளது. இதனால் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பேச முடியுமே தவிர பிறிதொரு செயற்பாடுகளிலும் ஈடுபட முடியாது. (கண்ணன், என்.2018ஆகஸ்ட்19) செய்யத் தவறினார் என்பதற்காக செய்தவற்றினை மறப்பது நாகரிகமல்ல. தனிமனித வேட்கைகளுடன் ஆளுமையும் நாட்டின் புதுப்படையான வேட்கைகளுடன் இணைகின்றபோது முக்கியமான தலைவர்கள் உருவாகின்றனரென்பது கருணாநிதிக்கும் பொருந்தும் என்ற கா.சிவத்தம்பியின் கூற்று இவ்விடத்தில் நோக்கத்தக்கது. எனவே கருணாநிதியினைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர் விவகாரம் பொறுத்து அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மேற்குறித்த விடயமாக எம்.ஜி.ஆருக்கு அடுத்த நிலையிலும் ஜெயலலிதாவிற்கு முன்னாகவுமே வைத்து நோக்க முடியும். அவ்வகையில் முக்கியமான தமிழகத்தின் மூன்று தலைவர்களில் இரண்டு இடத்தில் வைத்துக் கருணாநிதி பார்க்கப்படுகின்றார்.

**உசாவியவை**

**நூல்கள்**

அருந்தவராஜா,க. (2018). *சமகால சர்வதேச அரசியல் வரலாறு,* நல்லூர் : அஞ்சு வெளியீட்டகம்.

அருந்தவராஜா,க.(2017). *ஜெயலலிதா: கலையிலிருந்து அரசியல் வரை*, நல்லூர் : அஞ்சு வெளியீட்டகம்.

முகம்மது சமீம்.(1998). *ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்,* கொழும்பு : றிசானா பப்ளிசர்ஸ்.

பாலசிங்கம்,அன்ரன்.(2003). விடுதலை-*கட்டுரைத் தொகுப்பு,* .ங்கிலாந்து : பெயர்மக்ஸ் பதிப்பகம்.

வீரமணி,கே.(1992). *பெண்ணுரிமை குறித்து பெரியார்,* சென்னை.

Diehl, Anita. (1977). *E. V. Ramaswami Naidu-Periar : A study of the influence of a personality in contemporary South India,* Sweden : Scandinavian University Books.

Kothandaraman, Ponnusamy. (1995). *Tamil Varalarril, Tantai Periyar*, Chennai : Poompolil Veliyedu.

**பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்**

1. உதயன், நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2. தினக்குரல், ஏசியா மீடியா பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்
3. தினகரன், திருநெல்வேலி மாவட்டம்.

4. தினமணி, திருநெல்வேலி மாவட்டம்.
3. தினமலர், சண் குழுமம், திருநெல்வேலி மாவட்டம்.
6. தினத்தந்தி, திருநெல்வேலி மாவட்டம்.
7. வலம்புரி, வலம்புரி அசோசியேசன் ஸ்தாபனம், யாழ்ப்பாணம்.
3 வீரகேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.